**செய்தி வெளியீடு எண்:176** **நாள் : 23.04.2015**

## <u>அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை– 600 006</u>

### <u>மேல்நிலைத் தேர்வு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்வு முடிவுகள் வெளியிடுதல்</u>

கடந்த மார்ச் 5–ம் தேதி முதல் மார்ச் 31–ஆம் தேதிவரை நடைபெற்ற மேல்நிலைத் தேர்வு (ப்ளஸ் 2) முடிவுகள் 07.05.2015 அன்று காலை 10.00 மணிக்கு வெளியிடப்படுகிறது.

கடந்த மார்ச் 19–ம் தேதி முதல் ஏப்ரல் 10–ம் தேதிவரை நடைபெற்ற பத்தாம் வகுப்பு தேர்வு (எஸ்எஸ்எல்சி) முடிவுகள் 21.05.2015 அன்று காலை 10.00 மணிக்கு வெளியிடப்படுகிறது.

தேர்வர்கள் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி, மாதம், வருடத்தினைப் பதிவு செய்து, தேர்வு முடிவுகளை மதிப்பெண்களுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள இணையதளங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

www.tnresults.nic.in
www.dge1.tn.nic.in
www.dge2.tn.nic.in
www.dge3.tn.nic.in

மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் இயங்கும் தேசிய தகவல் மையங்களிலும் (National Informatics Centre), அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும் கட்டணம் இன்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

பள்ளிமாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும் மதிப்பெண்களுடன் கூடிய தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**